<u>சுருக்கம்</u>

பள்ளிக்கல்வி – சுயநிதி அடிப்படையில் செயல்படும் தனியார் பள்ளிகளில் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் கல்வி கட்டணங்களை முறைப்படுத்த அமைக்கப்பட்ட குழுவின் தலைமையாளர் பதவிகாலம் முடிவடைந்த நிலையில் அக்குழுவிற்கு புதிய தலைமையாளர் நியமனம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ப.க. (பொ.நூ.2) துறை</u>

அரசாணை (நிலை) எண். 50 நாள்: 21.03.2017.

திருவள்ளுவர் ஆண்டு, 2048

பங்குனி–08

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை (நிலை) எண்.320, பள்ளிக்கல்வி (எக்ஸ்2)த்துறை, நாள் 07.12.2009.
2. அரசாணை (நிலை) எண்.295, பள்ளிக்கல்வி (எக்ஸ்2)த்துறை, நாள் 30.10.2010
3. அரசாணை(நிலை) எண்.118, பள்ளிக்கல்வி(எக்ஸ்2)த் துறை, நாள் 05.08.2011.
4. அரசாணை(நிலை)எண்.318, பள்ளிக்கல்வி(எக்ஸ்2)த் துறை, நாள் 31.12.2012.
5. சென்னை உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளரின் கடித எண்.6752/2015-J, நாள் 07.03.2017.

<u>ஆணை:–</u>

பள்ளிகளில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கல்விக்கட்டண விகிதங்களை ஒழுங்குபடுத்தவும், கூடுதலாக கட்டண வசூலிலும், நன்கொடை வசூலிலும் ஈடுபடும் பள்ளிகளின் செயல்பாட்டை சட்டரீதியாக எதிர்கொள்ளவும் 2009–ம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றப்பட்டு 07.12.2009 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. மேற்படி சட்டத்தின் பிரிவு 5(1)ன் படி தனியார் பள்ளிகளில் வகுப்பு எதிலும் அல்லது படிப்புப்பிரிவு எதிலும் சேர்ப்பதற்கான கட்டணத்தை தீர்மானிக்கும் நோக்கத்திற்காகக் மேலே1–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது:–

| | | |
|---|---|---|
| 1 | நீதியரசர் திரு.கே.கோவிந்தராஜன்(ஓய்வு) | தலைமையாளர் |
| 2 | பள்ளிக்கல்வி இயக்குநர் | பதவி வழி உறுப்பினர் |
| 3 | மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் | பதவி வழி உறுப்பினர் |
| 4 | தொடக்கக் கல்வி இயக்குநர் | பதவி வழி உறுப்பினர் |
| 5 | இணைத் தலைமை பொறியாளர் (கட்டிடங்கள்) பொதுப்பணித்துறை | பதவி வழி உறுப்பினர் |
| 6 | அரசு கூடுதல் செயலாளர் பள்ளிக்கல்வித் துறை. | பதவி வழி உறுப்பினர்/ செயலர் |

(த.பி.பா)

2. மேற்கண்ட குழுவின் கூட்டத்தை தலைமையாளர் தலைமை ஏற்று நடத்துவார் என்றும், தலைமையாளரின் பதவிக்காலம் அவர் அவ்வாறு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு கால அளவாக இருக்கும் என்றும், மேலும் எந்தக் காரணத்திற்காகவும், அதற்கு முன்னதாக காலி இடம் எதுவும் ஏற்படுகின்ற நேர்வில், எஞ்சிய கால அளவிற்கு அந்தக் காலி இடம் நிரப்பப்படும் என்றும் ஆணையிடப்பட்டது.

3. மேற்கண்ட கட்டண நிர்ணயக் குழுவின் தலைமையாளராக மேலே 4–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி நியமனம் செய்யப்பட்ட திரு. எஸ். ஆர். சிங்காரவேலு அவர்களின் பதவிக்காலம் 30.12.2015–வுடன் முடிவடைந்தது.

4. சென்னை உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர் அவர்கள் மேலே 5–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. T. V. மாசிலாமணி அவர்களை கட்டண நிர்ணயக்குழுவின் தலைமையாளராக நியமனம் செய்ய சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் இசைவு அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

5. மேலே தெரிவிக்கப்பட்ட நிலையில் 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டப்பிரிவு 5–ன்படி, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. T. V. மாசிலாமணி அவர்களை தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக்குழுவின் தலைமையாளராக மூன்றாண்டு காலத்திற்கு நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த. உதயச்சந்திரன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
நீதியரசர் திரு. T. V. மாசிலாமணி,
ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்,
எண்.10, ராணி தெரு, டாக்டர் சீதாபதி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.
தலைமைப் பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை–104.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை –6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை –6.
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை –6.
இணைத் தலைமை பொறியாளர் (கட்டிடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை–6.
அரசு கூடுதல் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9.

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.